இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 128 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 2 – திங்கள்கிழமை 18 டிசம்பர் 2023 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 128: Thiruvalluvar Year - 2054 - Margazhi 2 - Monday 18 December 2023 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

# பேரிடரில் மீண்டோம்... சேலத்தில் சந்திப்போம்!



## உங்களில் ஒருவன்

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

வரலாறு காணாத கனமழையை மிக்ஜாம் புயலின் எதிரொலியாக அல்ல.. அல்ல.. இடியொலியாக எதிர்கொண்டன சென்னையும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களும்!

எத்தகைய இடர் வந்தாலும் அதிலிருந்து மக்களைக் காப்பதில் அக்கறையும் பொறுப்பும் கொண்ட ஆட்சியை நடத்தி வருகின்ற காரணத்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன் சென்னை மாநகரத்தின் முக்கிய பகுதிகள் பலவற்றிலும் மழைநீர் வடிகால் பணிகள் நிறைவேற்றப்பட்டு, மற்ற இடங்களிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில்தான் மிக்ஜாம் புயலையும் கனமழையையும் எதிர்கொள்ள நேரிட்டது.

ஒரே நாளில் இடைவிடாமல் கொட்டித் தீர்த்த மழையின் அளவு 40 சென்டி மீட்டருக்கு மேல் என்பதால் சென்னை கடந்த 50 ஆண்டுகளில் காணாத பேரிடரை எதிர்கொண்டது. டிசம்பர் 4ஆம் நாள் முழுவதும் கனமழை பெய்த நிலையில், மறுநாள் (டிசம்பர் 5) அதிகாலைக்குள்ளாக ஏறத்தாழ பெரும்பாலான பகுதிகளில் வெள்ளநீர் வடிந்திருந்தது. அதற்கு காரணம், திராவிட மாடல் அரசின் மழைநீர் வடிகால் பணிகளும், மழை பெய்த நேரத்திலும் மாநகராட்சி மற்றும் அரசுத் துறை பணியாளர்களின் அயராத உழைப்பும்தான்.

**2015ஆம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சியில் செம்பரம்பாக்கம் ஏரியின் தண்ணீரை முறையான வகையில் திறக்காமல், ஒரே இரவில் அளவுக்கதிமாகத் திறந்து விட்டு உருவாக்கப்பட்ட செயற்கை வெள்ளத்தின்போது சென்னைக்குள்ளேயே வாகனங்கள் வர முடியாத நிலை இருந்தது. ஆனால், மிக்ஜாம் புயல் சென்னையைக் கடந்த சில மணிநேரங்களிலேயே செங்கல்பட்டு முதல் சென்னை வரையிலான ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து சீரானது. பூந்தமல்லி நெடுஞ்சாலையிலும் சீரான நிலைதான்.**

அதே நேரத்தில், சென்னைப் புறநகரின் ஏரிகள் சூழ்ந்த பகுதிகளிலும், கடல் மட்டத்துக்கு இணையான சென்னையின் தாழ்வான பகுதிகளிலும் மழை நீர் வெள்ளமாகத் தேங்கியிருந்ததை அறிந்து, அங்குள்ள மக்களுக்கு உதவிடவும், அவர்களை மீட்கவும், அந்தப் பகுதியில் வெள்ளநீரை வடியச் செய்து, இயல்பு நிலை திரும்பிடவும் அரசு இயந்திரங்கள் முழுமையான அளவில் தங்கள் பணிகளை மேற்கொண்டன.

சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் கழகத்தினர் கழகப் பணியாற்றிட வேண்டும் என்று உங்களில் ஒருவனான நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று, கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர, கழக அமைப்புகளின் நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் தொடர்ந்து களப்பணியாற்றி மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து, உடை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர்.

**தண்ணீரை வெளியேற்றுவதற்கும், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளிலிருந்து மக்களை மீட்பதற்கும் கழக நிர்வாக அமைப்பினரும், சார்பு அணியினரும் முழுவீச்சில் பணியாற்றி, மக்களின் துயர் துடைத்தனர். மழை அளவையும் அதன் தாக்கத்தையும் கண்காணிப்பு அறைக்கு நேரில் சென்று அங்குள்ள அலுவலர்களிடமும், உதவிக்கான அழைப்பு விடுத்த பொதுமக்களிடமும் பேசிய உங்களில் ஒருவனான நான், என்னுடைய கொளத்தூர் தொகுதியில் தொடர்ச்சியாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டேன்.**

> **பேரிடரிலும் அரசியல் செய்யும் குணம் படைத்தவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், மக்கள் நலன் காக்க சிந்தித்து செயல்படும் அரசு, 6000 ரூபாய் நிவாரணம் அறிவித்து, அதற்கானப் பணிகளை முன்னெடுத்துள்ளது. பேரிடரில் உயிர் இழந்தவர்களுக்கான நிவாரணம், மீனவர்களுக்கான வாழ்வாதாரம் உள்ளிட்ட அனைத்திலும் கவனம் செலுத்தி அவற்றுக்கான தொகை உயர்த்தப்பட்டுள்ளது.**

அதுபோல, இளைஞரணிச் செயலாளரும் இளைஞர்நலன் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சருமான தம்பி உதயநிதி தனது சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் கொட்டுகிற மழை நேரத்திலேயே வெள்ளநீரில் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன், நிவாரணப் பணிகளையும் நேரில் மேற்கொண்டார். கழக மருத்துவ அணிச் செயலாளரும் ஆயிரம் விளக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் எழிலன் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். சைதாப்பேட்டையிலும் தென்சென்னையின் மற்ற இடங்களிலும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில் கழகத்தினர் நிவாரணப் பணிகளில் முழுவீச்சாக ஈடுபட்டனர். துறைமுகம் தொகுதியிலும் வடசென்னையின் மற்ற பகுதிகளிலும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள் தலைமையில் பணிகள் விரைந்து நடைபெற்றன. சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியா அவர்கள் அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து மேற்கொண்டார். ஆலந்தூர் தொகுதியிலும் காஞ்சி வடக்கு மாவட்டத்திலும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் கழக நிர்வாகிகள் பணிகளை மேற்கொண்டனர்.

அண்ணாநகர், அம்பத்தூர், ஆர்.கே. நகர், ஆவடி, உத்திரமேரூர், எழும்பூர், காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி, செங்கல்பட்டு, சோழிங்கநல்லூர், தாம்பரம், தியாகராயநகர், திரு.வி.க.நகர், திருத்தணி, திருப்பெரும்புதூர், திருப்போரூர், திருவள்ளூர், திருவொற்றியூர், துறைமுகம், பல்லாவரம், பூந்தமல்லி, பெரம்பூர், பொன்னேரி, மதுரவாயல், மதுராந்தகம், மயிலாப்பூர், மாதவரம், ராயபுரம், விருகம்பாக்கம், வில்லிவாக்கம், வேளச்சேரி என சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களுக்குட்பட்ட தொகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்த பகுதிகளுக்கு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை நேரில் அனுப்பி பணிகளை விரைவுபடுத்தினேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரிடமும் அலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமைகளைக் கேட்டறிந்தேன்.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட சட்டமன்ற உறுப்பினர்களுடன் மேயர், சேர்மன், கவுன்சிலர் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் களத்தில் நின்றனர். அவர்களுடன் கழகத்தினர் துணை நின்றனர்.

உங்களில் ஒருவனான என்னுடைய வழிகாட்டுதலில் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரும் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான தம்பி டி.ஆர்.பி.ராஜா தலைமையில் ஐ.டி.விங் நிர்வாகிகள் வார் ரூம் அமைத்து, சமூக வலைத்தளங்கள் வாயிலாக வைக்கப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலித்து, ஒவ்வொரு பகுதியிலும் மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகளையும், மீட்பு நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொண்டனர்.

24X7 என்ற முறையில் பகல்இரவு பாராது செயல்பட்ட இந்த வார் ரூமுக்கு உதவி கேட்டு வந்த மொத்த கோரிக்கைகள் 5 ஆயிரத்து 689 ஆகும். இதில்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## புயல், மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# ரூ.6000 நிவாரணத் தொகை!

## வேளச்சேரியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச. 18 -**

**மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000 நிவாரணம் வழங்கும் பணியை நேற்று சென்னை, வேளச்சேரியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாட்டில் கடந்த 3 மற்றும் 4ம் தேதி ‘மிக்ஜாம்’ புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் அதிகனமழை பெய்தது. மேலும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் குறிப்பிட்ட சில வட்டங்களில் கனமழை பெய்தது. மிக்ஜாம் புயல் வெள்ளம் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித்தொகையாக ரூ.6 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி, சென்னை மாவட்டத்தில் அனைத்து பகுதிகள், செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் வட்டங்கள் முழுமையாகவும், திருப்போரூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூர் வட்டம் முழுமையாகவும், பெரும்புதூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஆவடி, பூந்தமல்லி, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் ஆகிய 6 வட்டங்களில் உள்ள மக்களுக்கு ரூ.6 ஆயிரம் வழங்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் யாருக்கெல்லாம் ரூ.6 ஆயிரம் வழங்கப்படும் என்று தமிழக அரசு கடந்த மூன்று நாட்களுக்கு முன் அரசாணை வெளியிட்டது. அதன்படி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ரேஷன் கடை ஊழியர்கள் மூலம் டோக்கன் வழங்கப்பட்டு வருகிறது. நேற்றும் டோக்கன் வழங்கப்பட்டது. டோக்கனில் குறிப்பிட்டுள்ள நாள், நேரத்திற்கு அவர்கள் வழக்கமாக பொருட்கள் வாங்கும் ரேஷன் கடைகளுக்குச் சென்று, ரூ.6,000 நிவாரணத் தொகை பெறலாம். கைரேகை (பயோமெட்ரிக்) வைத்து, உறுதி செய்யப்பட்ட பிறகே பணம் வழங்கப்படும்.

அதேநேரம் ஒன்றிய, மாநில அரசு, பொதுத்துறை நிறுவன உயர் அலுவலர்கள், வருமான வரி செலுத்துவோர், சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்கள், தங்களது வாழ்வாதாரம் பாதிப்பு, வீட்டு உபயோகப் பொருட்கள் இழப்பு ஏற்பட்டிருந்தால், பாதிப்பு விவரங்களை தங்களது வங்கி கணக்கு விவரத்துடன் தங்கள் பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகளில் விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பங்கள் சரி பார்க்கப்பட்டு அதன் அடிப்படையில் அவர்களுக்கு உரிய நிவாரணம் அவர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்களும் இன்று முதல் ரேஷன் கடைகளில் விநியோகம் செய்யப்படுகிறது.

தமிழக அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகையான ரூ.6,000 உதவித்தொகையை நேற்று (17ம் தேதி) முதல் 22ம் தேதி வரை ரேஷன் கடைகளில் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம். மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000 நிவாரணம் வழங்கும் பணியை நேற்று காலை 10 மணிக்கு சென்னை, வேளச்சேரி அஷ்டலட்சுமி நகரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து அந்த தொகுதியில் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் தொடங்கி வைத்தனர்.

பொதுமக்கள் கூட்ட நெரிசலை தவிர்க்க, டோக்கனில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு வந்து பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது.

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான வாக்குகளை ஒன்றிணைத்து - நாடாளுமன்றத் தேர்தலில்

# “இந்தியா கூட்டணி” மகத்தான வெற்றி பெறும்!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

சென்னை, டிச.18 -

**“ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான வாக்குகளை ஒன்றிணைத்து - நாடாளுமன்றத் தேர்தலில் “இந்தியா கூட்டணி” மகத்தான வெற்றி பெறும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டிற்கு அளித்துள்ள பேட்டியில் உறுதிபடக் கூறியுள்ளார்.**

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘தி இந்து’ ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டி வருமாறு:-*


THE HINDU
Saturday, December 16, 2023
News 13

‘Outcome of elections in Hindi heartland has shown that Opposition needs to consolidate anti-BJP votes’

Tamil Nadu Chief Minister says results of the recent polls in three States are a lesson for the Opposition INDIA bloc, but adds that Assembly elections will not have a bearing on the Lok Sabha poll; he says the Centre's appreciation proves that DMK government efficiently handled the aftermath of Cyclone Michaung in Chennai and neighbouring districts; urges Governor to work for welfare of State

INTERVIEW

M.K. Stalin

B. Kolappan

**செய்தியாளர்:** *புயலால் ஏற்பட்ட சேதத்தைப் பார்வையிட வந்த மத்திய நிபுணர்கள் தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாகத்தான் பெரும் இழப்பு தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஆனால் நிவாரணப் பணிகள் குறித்து அரசுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களும் எழுந்துள்ளன. அவை ஒரு புறம் இருக்க நிவாரணப் பணிகள் உங்களுக்குத் திருப்தியை அளிக்கின்றனவா? இன்னும் சிறப்பாகச் செயல்பட்டிருக்க முடியும் என்று நினைக்கிறீர்களா?*

### தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாடுகள்தான் காரணம்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒன்றிய அரசின் குழு முழுமையாக வரவேற்றுப் பாராட்டி இருக்கிறது. ‘சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததாலேயே பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது, இல்லையென்றால் பாதிப்பு மிக மோசமாக இருந்திருக்கும்’ என்றும், ‘உரிய நேரத்தில் நீர் திறந்து விடப்பட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டிருக்கிறது’ என்றும், ‘அதற்காக இந்த அரசை நாங்கள் பாராட்டுகிறோம்’ என்றும் ஒன்றியக் குழு பாராட்டி இருக்கிறது.

இதே கருத்தை, ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களும் என்னைச் சந்தித்தபோது தெரிவித்தார்கள்.

அரசியல் ரீதியாக ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கும் எங்களுக்குமான கொள்கை முரண்பாடுகள் அனைவரும் அறிந்ததே. அதனையும் தாண்டி இந்தளவுக்குப் பாராட்டுகிறார்கள் என்றால், தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாடுகள்தான் இதற்குக் காரணம்.

கடுமையான மழை இரண்டு நாட்கள் இடைவிடாது பெய்கிறது. மழை நின்றதும் நிவாரணப் பணிகளை நாங்கள் தொடங்கிவிட்டோம். மறுநாளே போக்குவரத்து சீர்செய்யப்பட்டது. பெரும் பாலான பகுதிகளுக்கு மின் இணைப்பானது மூன்று நாட்களுக்குள் கிடைத்துவிட்டது. புறநகரில் ஒரு சில பகுதிகள் நீங்கலாக நான்கைந்து நாட்களுக்குள் மற்ற அனைத்துப் பகுதிகளும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி விட்டன.

தண்ணீரில் மூழ்கியிருந்த பகுதி மக்களுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்தோம். அவர்களையும் பாதுகாப்பான பகுதிக்கு அழைத்து வந்து அமர்த்தினோம். நானே பல்வேறு பகுதிக்குச் சென்றேன். 20 அமைச்சர்கள், 50 ஐ.ஏ.எஸ் - ஐ.பி.எஸ் அதிகாரிகள், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் களத்தில் இருந்தார்கள். வெளிமாவட்டங்கள் அனைத்திலிருந்தும் ஆதரவுக் கரம் நீண்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த நொடி வரையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

புயலுக்கு முன்பும் - புயலின் பிறகும் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான் பாதிப்பு குறைந்தது. பொதுவாக மக்கள் பணியாற்றும் நாங்கள் மேலும் மேலும் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்றுதான் நினைப்போம். இன்னும் சிறப்பாகச் செயல்பட்டிருக்க முடியுமா என்று கேட்கிறீர்கள். இன்னும் அதிகமாக மக்களுக்கு உதவவே நான் ஆசைப்படுகிறேன்.

## வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் வெகு விரைவில் வெளியிடப்படும்!

### அதிக அளவு மழை பொழிவே காரணம்!

**செய்தியாளர்:** *2015-இல் செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்தில் இருந்து நீர் திறந்து விடுவதில் ஏற்பட்ட குளறுபடியே பெரும் பிரச்சினையை உருவாக்கியது. ஆனால் ஆட்சியில் அமர்ந்த நாளில் இருந்தே கட்டமைப்புகளை வலுப்படுத்தி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உங்கள் அரசு எடுத்திருந்தும் இத்தகைய இழப்பு ஏற்படக் காரணம் என்ன? இந்த அனுபவத்தில் இருந்து அரசுக்குக் கிடைத்திருக்கும் பாடம் என்ன?*

**மு.க.ஸ்டாலின்:** செம்பரம்பாக்கத்தில் 2015-ஆம் ஆண்டு உரிய நேரத்தில் தண்ணீர் திறந்து விடாத காரணத்தால் - அ.தி.மு.க. ஆட்சியில் சென்னையே மிதந்தது. ஏரியைத்திறந்துவிடுவதற்கான அனுமதியை அம்மையார் ஜெயலலிதாவிடம் வாங்குவதற்கு நாள்கணக்கில் காத்திருந்தார்கள் அதிகாரிகள். ஆனால் இப்போது அப்படி அல்ல. உரிய நேரத்தில் தண்ணீரைப் படிப்படியாகத் திறந்து விட்டு, தயார் நிலையில் இருந்தோம். ஆனாலும் வெள்ளம் அதிகமாக வரக் காரணம், மழையின் அளவு அதிகமாக இருந்ததுதான்.

இதுகுறித்து Former MIDS Director டாக்டர் S.ஜனகராஜன் அவர்களுடைய ஊடகப் பேட்டி ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தப் பேட்டியில், “2015 பேரிடர் Man Made Disaster. அது மழை வெள்ளத்தால் ஏற்பட்டது அல்ல. ஆனால் 2023 பேரிடர் கொடூரப் புயல் காரணமாக 36 மணி நேரத்தில் 530 மி.மீட்டர் மழைபெய்த காரணத்தால் ஏற்பட்டது” என்று தெரிவித்துள்ளார்.

மிக்ஜாம் புயலானது சென்னையில் இருந்து 100 கி.மீ. தொலைவில் 16 மணி நேரம் நிலை கொண்டிருந்தது. மணிக்கு 8 முதல் 10 கி.மீ. வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. இதுவே, சென்னையில் பரவலாக இடைவிடாது கனமழை பெய்யக் காரணமாயிற்று. 47 ஆண்டுகளில் பெய்யாத மழை, 177 ஆண்டுகளில் மூன்றாவது பெரிய மழை. எனவேதான் தண்ணீர் அதிகம் தேங்கியது. கடல் மட்டம் உயர்ந்து இருந்ததால், போய்ச் சேரும் தண்ணீரை உள்வாங்கவில்லை. இதுவும் இப்போதைய சூழ்நிலைக்குக் காரணம் ஆகும்.

### காலநிலை மாற்றம்தான் நாம் எதிர்கொள்ளும மிகப் பெரிய பிரச்சினை!

ஒன்றிய அரசிடம் நிதிக் கோரிக்கை வைக்கும் எனது கடிதத்தைப் பிரதமர் அவர்களிடம் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கொடுத்த போது, இதே கருத்தைத்தான் பிரதமர் மோடி அவர்களும் சொல்லி இருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே மற்ற மாநில அரசுகளுக்கு முன்மாதிரியாகக் காலநிலை மாற்ற இயக்கத்தைத் துவக்கி இருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். அதற்கான சிறப்புக் குழுவையும் அரசு அமைத்துள்ளது. துறையின் பெயரை “சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை” என்று அறிவித்தோம். தமிழ்நாட்டிற்கான காலநிலைத் திட்டத்தை அறிவித்தோம். அவர்களது மாநாட்டில் நானே கலந்து கொண்டு உரையாற்றி இருக்கிறேன். இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் இந்தளவுக்கு கவனம் செலுத்தவில்லை.

எனவே மக்கள் தொகையின் அடர்த்தி - மழையின் அளவு - புயல் சீற்றங்கள் - வடிகால் கொள்ளளவு - வெள்ளச் சமவெளிகள் - கடல் மட்டம் - புவி வெப்பமயமாதல் - ஆகிய அனைத்தையும் மனதில் வைத்து திட்டங்களை உருவாக்க வேண்டும். காலநிலை மாற்றம் தான் நாம் எதிர்கொள்ளப் போகும் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கப் போகிறது என்பதை நான் பல நிகழ்வுகளில் சொல்லி இருக்கிறேன். இதையும் மனதில் வைத்து திட்டங்களை உருவாக்க வேண்டும்.

### எந்தப் பணியையும் திட்டமிட்டு செய்யாத அ.தி.மு.க. அரசு!

**செய்தியாளர்:** *புறநகர்ப் பகுதிகளில் திட்டமிடப்படாத கட்டுமானப் பணிகள் பெருகி விட்டன. நீர் வடிவதற்கு எந்த விதமான வசதியை உருவாக்காமலும் மற்ற அடிப்படை வசதிகளை உருவாக்காமலும் அவற்றுக்கு அனுமதி அளிக்கப்பட்டதே வெள்ளம் வீடுகளில் புகுந்தது. இக்குற்றச்சாட்டை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** 2011 முதல் 2021 வரையிலான பத்தாண்டு காலத்தில் எந்தப் பணியையும் திட்டமிட்டுச் செய்யவில்லை அ.தி.மு.க. அரசு. அதன் விளைவுகளைத்தான் நாம் இப்போது அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். 2021-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி திருப்புகழ் தலைமையில் ஆலோசனைக் குழுவை அமைத்தோம். அவர்களது ஆலோசனைப்படி திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

❖ அடையாறு மற்றும் கூவம் வடிநிலப்பகுதிகளில் உலக வங்கி நிதியில் 44.88 கி.மீ நீளத்திற்கு ரூ.120 கோடி மதிப்பீட்டிலும், சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் 50 கி.மீ நீளத்திற்கு ரூ.255 கோடி மதிப்பீட்டிலும், மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் 59.5 கி.மீ. நீளத்திற்கு ரூ.232 கோடி மதிப்பீட்டிலும், மூலதன நிதியில் 11 கி.மீ நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சுமார் 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட மழைநீர் வடிகால் பணிகளால் சென்ற 2015-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது பெரும் பாதிப்பை சந்தித்த தியாகராய நகர், அசோக் நகர், அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர், புளியந்தோப்பு போன்ற பல பகுதிகளில் தற்போது பாதிப்பு பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

### மழைநீர் வடிகால்வாய் பணிகள்!

சென்னையின் வட பகுதியில் உள்ள கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் 769 கி.மீ நீளத்திற்கு, ரூ.3,220 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 68 விழுக்காட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதனால் திருவொற்றியூர், மணலி, மாதவரம் மற்றும் அம்பத்தூரில் வாழும் மக்கள் பயனடைவார்கள்.

❖ கோவளம் வடிநிலப்பகுதியில் 360 கி.மீ. நீளத்திற்கு. ரூ.1714 கோடி மதிப்பீட்டில் KfW வங்கி நிதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால், நங்கநல்லூர், கண்ணன் காலனி, மயிலை பாலாஜி நகர், புவனேஸ்வரி நகர், புழுதிவாக்கம், கண்ணகி நகர், எம்.சி.என். நகர் மற்றும் துரைப்பாக்கம் பகுதிகளில் வாழும் மக்கள் பயனடைவார்கள். மீதமுள்ள பணிகள் நிறைவேற்றப்படும் போது, இந்திரா நகர், நீலாங்கரை, வெட்டுவான்கேணி, செம்மஞ்சேரி உள்ளிட்ட சென்னையின் தென்பகுதிகளில் வாழும் மக்கள் பயனடைவார்கள். இந்தப் பணிகள் அனைத்தும் நிறைவேறும் போது, சென்னையில் வெள்ளத்தின் தாக்கம் பெருமளவு குறைக்கப்படும் என்று நான் கருதுகிறேன்.

### பள்ளிக்கரணை சதுப்புநிலம்: பயன்பாடு குறித்து மறு ஆய்வு!

**செய்தியாளர்:** *பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் பெரும்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. நீர் வடிந்து தேங்காமல் இருப்பதற்கு இயற்கையால் உருவான அந்த நிலத்தை முழுவதுமாக மீட்டு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதுபோல வேளச்சேரியிலும் பல இடங்கள் சதுப்பு நிலமாகவே இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க அரசின் நடவடிக்கை என்னவாக இருக்கப் போகிறது?*

**மு.க.ஸ்டாலின்:** பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை முழுமையாகப் பாதுகாப்பது மிகமிக அவசியமானதாகும். தென்சென்னை பகுதிகளில் ஏற்படும் மழை வெள்ளப் பாதிப்புகளைக் குறைப்பதில் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளின் பயன்பாடு குறித்து நிச்சயமாக மறு ஆய்வு செய்யப்படும். இந்த சதுப்பு நிலத்தைப் பாதுகாக்கவும், விரிவுபடுத்தவும், வனத்துறை ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறது. அதேபோல், சென்னை பெருநகரத்திற்கான மூன்றாவது முழுமைத் திட்டம் (Third Master Plan) தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த முழுமைத் திட்டத்தில் வெள்ளத் தடுப்பிற்கான திட்டங்கள் உறுதி செய்யப்பட்டு, ஓராண்டு காலத்திற்குள் அது வெளியிடப்படும்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# சில சக்திகளின் கைப்பாவையாகச் செயல்படுவதைத் தவிர்த்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஆளுநர் உறுதுணையாக இருக்க வேண்டும்!

# பேரிடரில் மீண்டோம்... சேலத்தில் சந்திப்போம்!

## உங்களில் ஒருவன் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

கர்ப்பிணிப் பெண்கள், அவசர சிகிச்சை வேண்டியோர், மாற்றுத்திறனாளிகளும் அடங்குவர். இவர்கள் உள்பட 4 ஆயிரத்து 266 கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களை மீட்டும் அவர்களுக்குத் தேவையான உதவிகளும் செய்யப் பட்டுள்ளன. மொத்த கோரிக்கைகளில் 74.9% அளவிற்கு நிறை வேற்றப்பட்டுள்ளன.

இதுபோலவே கழகத்தின் ஒவ்வொரு அணி சார்பிலும் உதவிக்கரம் நீண்ட காரணத்தால், சென்னை மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களில் விரைந்து இயல்பு நிலை திரும்பியது. விமர்சனம் செய்வதற்கும் வீண்பழி சுமத்துவதற்கும் எதிர்க்கட்சிகள் முனைப்பு காட்டினாலும், மக்களின் துயர் துடைக்க அவர்கள் முன்வரவில்லை. எதிர்க்கட்சியாக இருந்தபோதும் திராவிட முன்னேற்றக் கழகம் 2015 வெள்ள பாதிப்பிலும், கொரோனா பேரிடரில் ஒன்றிணைவோம் வா என்ற பெயரிலும் மக்களின் துயரைத் துடைத்தது. ஆளுங்கட்சியாக இருக்கும்போதும் தி.மு.கழகத்தினர்தான் மிக்ஜாம் கனமழை வெள்ள பாதிப்பில் மக்களின் துயர் துடைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஒரு சில இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது, மக்களின் கோரிக்கைகள் உடனடியாக செவி மடுக்கப்படாதது போன்ற தகவல்களையும் கவனித்து, அங்கும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்தது உங்களில் ஒருவனான என்னுடைய தலைமையிலான திராவிட மாடல் அரசு. ஆட்சியை வழங்கிய மக்களிடம் பொறுப்புடன் நடந்துகொள்ளும் தன்மை கொண்டது இந்த அரசு. **டி.வியில் பார்த்துதான் விவரம் தெரிந்துகொண்டேன் என்றோ, பங்களா வீட்டின் வாசலில் உள்ள பெரிய இரும்புக் கதவு திறக்கும் வரை காத்திருக்க வேண்டும் என்றோ முந்தைய ஆட்சியாளர்களின் நிலைமை இன்றில்லை. மக்கள் பிரதிநிதிகளை மக்கள் அணுகமுடியும், கேள்வி கேட்க முடியும், நிவாரணம் பெற முடியும் என்ற ஜனநாயகப்பூர்வமான அரசு செயல்பட்டு வருகிறது.**

**தமிழ்நாட்டு மக்களுக்கும், பிற மாநில மக்களுக்கும் உரிமைகள் கிடைத்திட 2024 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்களமாக நிச்சயம் அமைந்திடும். அந்தக் களத்தை நோக்கி நம்மை ஆயத்தப்படுத்திட, சேலத்தில் தம்பி உதயநிதி தலைமையில் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு, மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் டிசம்பர் 24 அன்று நடைபெறுகிறது.**

**பேரிடரிலிருந்து மீண்ட மக்களின் மகிழ்வான மனநிலை தொடர்ந்திட கண்டு, நம்முடைய பொறுப்புகளை உணர்ந்து, சேலத்தில் சந்திப்போம்! களம் எதுவாயிலும் கலங்காது நிற்போம்! இளைஞரணி மாநாடு வெல்லட்டும்! அடுத்தடுத்த வெற்றிகளுக்கு அடித்தளமாகட்டும்!**

**மிக்ஜாம் புயலின் பாதிப்புகளைப் பார்வையிட வந்த ஒன்றிய குழுவினரும், அரசியல் மாச்சரியமின்றி திராவிட மாடல் அரசின் பணிகளைப் பாராட்டியிருப்பது நம் உண்மையான உழைப்புக்கும் அக்கறையான செயல்பாடுகளுக்குமான சான்றிதழ் மட்டுமல்ல, அவதூறு பேசி அரசியல் செய்ய நினைப்பவர்களின் கன்னத்தில் விழுந்த பளார் அறை என்றால் மிகையல்ல.**

பேரிடரிலும் அரசியல் செய்யும் குணம் படைத்தவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், மக்கள் நலன் காக்க சிந்தித்து செயல்படும் அரசு, 6000 ரூபாய் நிவாரணம் அறிவித்து, அதற்கானப் பணிகளை முன்னெடுத்துள்ளது. பேரிடரில் உயிர் இழந்தவர்களுக்கான நிவாரணம், மீனவர்களுக்கான வாழ்வாதாரம் உள்ளிட்ட அனைத்திலும் கவனம் செலுத்தி அவற்றுக்கான தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

**திராவிட மாடல் அரசின் பணிகளை பிற மாநிலங்கள் கவனிக்கின்றன. திராவிட மாடல் அரசின் திட்டங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்றன. இந்தியாவுக்கு வழிகாட்டும் வகையில் திராவிட மாடல் அரசின் செயல்பாடுகள் தொடரும் நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கொள்கையான பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் முன்னிறுத்திய மாநில உரிமைகள் காக்கப்படவேண்டும். முந்தைய அடிமை ஆட்சியாளர்களால் பறிபோன மாநில உரிமைகளை மீட்டாக வேண்டும்.** தமிழ்நாட்டு மக்களுக்கும், பிற மாநில மக்களுக்கும் உரிமைகள் கிடைத்திட 2024 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்களமாக நிச்சயம் அமைந்திடும். அந்தக் களத்தை நோக்கி நம்மை ஆயத்தப்படுத்திட, சேலத்தில் தம்பி உதயநிதி தலைமையில் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு, மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் டிசம்பர் 24 அன்று நடைபெறுகிறது.

பேரிடரிலிருந்து மீண்ட மக்களின் மகிழ்வான மனநிலை தொடர்ந்திட கண்டு, நம்முடைய பொறுப்புகளை உணர்ந்து, சேலத்தில் சந்திப்போம்! களம் எதுவாயிலும் கலங்காது நிற்போம்! இளைஞரணி மாநாடு வெல்லட்டும்! அடுத்தடுத்த வெற்றிகளுக்கு அடித்தளமாகட்டும்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054
கார்த்திகை 30
16-12-2023



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.12.2023) மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான எம்.எச். ஜவாஹிருல்லா, பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பி.அப்துல் சமது மற்றும் நிர்வாகிகள் சந்தித்து மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கழக இலக்கிய அணி செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.கலைராஜன், தனது இரண்டு மாத சட்டமன்ற உறுப்பினர் ஓய்வூதியத் தொகையை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில்

# அரியலூர் மாவட்டத்தில் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையில்பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

*அரியலூர், டிச. 18 -*

அரியலூர் மாவட்டம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், ஜெயங்கொண்டம் கிளையில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறையினை திறந்து வைத்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கும்பகோணம் கோட்டத்தில் பணிக் காலத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.ச.கலைவாணி ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஜெயங்கொண்டம் அரசு போக்குவரத்துக் கழக கிளையில் பணி நியமன ஆணைகளை வழங்கி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது : -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது முதல் அரசுப் பணியில் பணியாற்றி பணிக்காலத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி ஆணைகளை வழங்க வேண்டும் என உத்தரவிட்டு, பல்வேறு துறைகளில் பணிகாலத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் அரசு போக்குவரத்து கழகத்தில் பணி காலத்தில் இறந்துவிட்ட பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு படிப்படியாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. முன்னதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கும்பகோணம் கிளையில் 62 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது நம்முடைய ஜெயங்கொண்டம் கிளையில் இன்றையதினம் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 104 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமண ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தியுள்ள மகளிர் கட்டணமில்லா பேருந்து பயண திட்டத்தின் மூலம் தான் போக்குவரத்துத் துறை மீண்டும் உயர்ந்த நிலை அடைந்து வருகிறது. இத்திட்டத்தில் 40 சதவீதமாக இருந்த மகளிர் பேருந்து பயணம் தற்போது 60 சதவீதத்திற்கு மேல் எட்டியுள்ளது. இதற்கான பேருந்து கட்டணங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் உத்தரவிடப்பட்டு தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக ரூ.2800 கோடி நிதியானது வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் போக்குவரத்து பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியம் முதல் தேதியில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின் காரணமாக பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், அவர்களின் பொருளாதாரமும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தினை மேலும் மேம்படுத்தும் வகையில் 1500 பேருந்துகள் பாடி கட்டும் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டு, 400 பேருந்துகளின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 2000 புதிய பேருந்துகள் வழங்க நிதியுதவி அளிக்கப்பட்டு 1666 பேருந்துகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இப்பேருந்துகள் வருகிற ஜனவரி மாதத்தில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் கொடிய சைக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் செல்ல உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் தான் தனியாரிடமிருந்த பேருந்துகள் அரசுடைமையாக்கப்பட்டது. அதன் காரணமாகதான் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கிராமங்கள் தோறும் பேருந்து இயங்கப்பட்டு வருகிறது. இதற்கு காரணம் தமிழ்நாட்டில் 21,000 பேருந்துகள் தொடர்ந்து இயக்கப்படுவதுதான். நமது அரசு போக்குவரத்து கழகம் இத்தகைய பேருந்துகளை இயக்குவதான் காரணமாக ஏராளமான பொதுமக்கள் வேலைவாய்ப்பு, மருத்துவ தேவைகள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடிகிறது. எனவே, இது தொடர வேண்டும் என்ற காரணத்தில்தான் இரவு, பகல் பாராமல் உழைக்கும் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்கள் பயன்பெறும் வகையில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பணியாளர்களுக்கு எந்தவித கோரிக்கையுமின்றி 20 சதவீதம் போனஸ் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னையில் தற்போது பெய்த கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் நீரின் அளவானது குறைந்த உடன் பேருந்து போக்குவரத்துகள் வழங்கப்பட்டு அதன் மூலம் மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளை பயமின்றி மேற்கொண்டனர். இத்தகைய சிறப்பான சேவைகளை நமது அரசு போக்குவரத்து கழகம் மேற்கொண்டுள்ளது இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் மேலாண் இயக்குனர் ஆர்.மோகன், திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் எஸ். சக்திவேல், முதுநிலை துணை மேலாளர் கோவிந்தராஜ், பொது மேலாளர் நாசர், துணை மேலாளர்கள் சதீஷ்குமார், ரங்கராஜன், கார்த்திகேயன், ராமநாதன், ஜெயங்கொண்டம் கிளை மேலாளர் ராம்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணைச் செயலாளர் மு.கணேசன், மாவட்டப் பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், பூ.செல்வராஜ், வா. சௌந்தரராஜன், ரெங்க.முருகன் நகர கழகச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன், பொதுக் குழு உறுப்பினர் வி.எம். ஷாஜகான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். ஆர்.இராமராஜன், மாவட்டச் நெசவாளர் அணி அமைப்பாளர் தங்க.ராமகிருஷ்ணன், மாவட்ட தகவல்தொடர்பு அணி அமைப்பாளர் குலோத்துங்கன், நகர கழக நிர்வாகிகள் ஞானபிரகாசம், எஸ்.ராஜமாணிக்கம், மு.முரசொலிகுமார், பா.ரமேஷ், கொளஞ்சியப்பா, கு.பிரபாகரன், மா.செ.செந்தில்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், தொ.மு.ச. நிர்வாகிகள் டி. சேகர், பி.வி. அன்பழகன், கொளஞ்சி, இளங்கோவன், செல்வம், பட்டுசெல்வம், குமார், கணேசன், சுப்ரமணியன், இரவிச்சந்திரன், ஜெய்சங்கர், சங்கர், விஜயன், குமரவேல், பாலா, ஸ்ரீராம் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள், அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்

### அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து மாபெரும் வெற்றி பெறுவோம்!

# 2024 தேர்தல்: மோடி அரசை வீழ்த்துவதற்கான ஒரு பெரும் யுத்தம்!

## மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி பேச்சு!

*சென்னை, டிச. 18 -*

2024 நாடாளுமன்றத் தேர்தல் மோடி அரசை வீழ்த்துவதற்கான ஒரு பெரும் யுத்தம் என்றும், அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து மாபெரும் வெற்றி பெறுவோம் என்றும் சீத்தாராம் யெச்சூரி அழைப்பு விடுத்தார்.

இந்திய கம்யூனிச இயக்கத்தின் முன்னோடி தோழர் பி.ராமமூர்த்தி நினைவு சொற்பொழிவு டிசம்பர் 14 வியாழனன்று மாலை சென்னையில் நடைபெற்றது. இதில் பங்கேற்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி, 'கார்ப்பரேட் மதவாதக் கூட்டணி இந்திய அரசியலமைப்புச் சட்ட ஜனநாயகம் சீர் குலைப்பு' என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் பகுதிகள் வருமாறு:

ஆர்.எஸ்.எஸ்., இந்துத்துவா சக்திகள் தங்களது கண்ணோட்டத்தில் வெற்றியடைய 3 அம்சங்கள் தேவைப்படுகிறது. மத்திய தர வர்க்கத்தின் ஆதரவு, ஏகாதிபத்தியத்தின் ஆதரவு, தேர்தலில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு ஆகிய மூன்றும் தேவை. இப்படித்தான் கார்ப்பரேட் வகுப்புவாத கூட்டணி உருவாகிறது.

உலகம் முழுக்க நடைபெறும் அநியாயங்களில், மனித உரிமை மீறல்களில் அமெரிக்காதான் தலையிட்டு நீதியை நிலைநாட்டுவது போன்ற போலியான தோற்றத்தை உருவாக்கி வருகிறார்கள். இந்தியாவில் சிறுபான்மை மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டபோது அமெரிக்க ஏகாதிபத்தியம் எதுவுமே பேசாமல் இருந்தது.

மதச்சார்பின்மை, ஜனநாயகம் எனும் விழுமியங்களை சீர்குலைக்க வேண்டுமென்றால், மாநிலங்களுக்கு அதிகாரம் தரக்கூடிய கூட்டாட்சியை ஒழிக்க வேண்டும். அதை நோக்கி பா.ஜ.க. செல்கிறது.

மாநிலங்கள் உரிமைகள் பறிக்கப்படுவது பல்வேறு வடிவங்களில் நிகழ்கிறது. வரி வருவாய் பகிர்வு, நிதிப்பகிர்வு கொடுக்காமல் தத்தளிக்க வைக்கின்றனர். அரசியல் சாசன அடிப்படையில் உருவாக்கப்பட்ட அமைப்புகளை கட்டுப்படுத்துகின்றனர்.

ஜம்முகாஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கம் குறித்த வழக்கில் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு பலவிதங்களில் விமர்சனத்திற்குரியதாக உள்ளது. இந்த தீர்ப்பின் வாயிலாக மாநில உரிமைகள் முழுமையாக பறிக்கப்படுகிறது. இந்த தீர்ப்பின்படி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்தால், குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வந்து, எந்த ஒரு மாநிலத்தையும் துண்டு துண்டாக பிரிக்கக்கூடிய நடவடிக்கைக்கு வழிவகை செய்கிறது. தமிழகம் கூட 3 யூனியன் பிரதேசமாக பிரிக்கப்படலாம்.

நீதித்துறை, தேர்தல் ஆணையம், அமலாக்கத் துறை, வருமான வரித் துறை, மத்திய புலனாய்வு துறை போன்றவற்றை ஆளும் அரசாங்கத்தின் கருவியாக தவறாக பயன்படுத்தி வருகிறார்கள்.

அரசியல் சாசனத்தின் அடிப்படையாக உள்ள மதச்சார்பற்ற ஜனநாயகம், பொருளாதார இறையாண்மை, சமூக நீதி, கூட்டாட்சி கோட்பாடு ஆகிய நான்கையும் அழித்தொழிப்பதற்கான பாதையில் செல்கிறார்கள்.

மக்கள் மீது கட்டுப்பாட்டை கொண்டு வர வேண்டும் என்றால், வரலாற்றை திருத்த வேண்டும்; பாடத்திட்டத்தை மாற்ற வேண்டும்; சிறுபான்மை மக்களுக்கு எதிரான வெறுப்பு அரசியலை கட்டமைக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்து, இந்துத்துவா செல் வாக்கில் அனைவரையும் உள்ளடக்க வேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் நிகழ்ச்சி நிரலாக உள்ளது. இந்த எண்ணத்தோடு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தேவையென்றால், மக்களை சிந்திக்க விடாமல் செய்ய வேண்டும். எனவே, சுதந்திரமான சிந்தனைக்கு வழிவகுக்கும் உயர் கல்வி நிறுவனங்கள் மீது கட்டுப்பாட்டை கொண்டு வருகின்றனர். சிந்திக்கக் கூடாது, கேள்வி கேட்கக் கூடாது, மோடி சொல்வதை கேட்க வேண்டும் என்ற கண்மூடித்



தனமான நம்பிக்கையை கட்டமைக்கிற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டுள்ளனர்.

இதன்காரணமாகத்தான், புதிய நாடாளுமன்ற கட்டிடம் திறந்தபோது குடியரசுத் தலைவரை அழைக்க மறுத்தார்கள். ஒன்றிய அரசுக்கு எதிரான பல தீர்ப்புகளை உச்சநீதிமன்றம் அளித்துள்ளது. அரசியலமைப்பு சாசனத்தின் மாண்புகளை நிலைநிறுத்தும் தீர்ப்புகளை உதாசீனம் செய்கின்றனர். தீர்ப்புக்கு மாறாக, நாடாளுமன்றத்தில் சட்டங்களை கொண்டு வருகின்றனர். உச்சநீதிமன்றமாக இருந்தாலும், ஒப்புக்கொள்ளும்படி இல்லையென்றால், பெரும்பான்மையை வைத்து நாடாளுமன்றத்தில் மாற்றுவோம் என்ற அகங்காரம் பிரதிபலிக்கிறது. அனைத்தும் பிரதமர் என்ற ஒற்றை தலைவர்தான் செய்வார் என்கிற தோற்றத்தை திட்டமிட்டு கட்டமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்போது தான், இந்து ராஷ்டிரம் உருவாக்க முடியும் என்று நம்புகிறார்கள்.

**ஒற்றைத் தலைவர் என்ற பிம்பம்**

அரசியல் கட்டமைப்பை அவர்களுக்கு சாதகமாக மாற்றுகிற ஒரு அரசியல் திட்டம் அவர்களிடம் உள்ளது. பண மதிப்பிழப்பு, டிஜிட்டல் பண பரிவர்த்தனை, மாட்டிறைச்சி உண்ணலாமா கூடாதா, என்ன உடை உடுத்த வேண்டும், எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும் என்பதையெல்லாம் அவர் ஒருவர்தான் தீர்மானிப்பார். இப்படி ஒரு பிம்பத்தை கட்டமைத்து, மக்களின் சிந்தனைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

ஐந்து மாநில தேர்தல் முடிவுகளில் கூட, இந்துத்துவ செல்வாக்கு தீவிரப்பட்டுள்ளதை பார்க்க முடிகிறது. இதையெல்லாம் தங்குதடையின்றி செய்ய முடிகிறதென்றால், அதற்கு காரணம் ஆட்சி அதிகாரத்தில் இருப்பது தான். அவர்களது நிகழ்ச்சி நிரலை தடுக்க, அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்க வேண்டுமென்றால், ஆட்சி அதிகாரத்திலிருந்து அவர்களை அகற்ற வேண்டும். நாடாளுமன்ற தேர்தல் வடிவில் பெரும் போராட்டம் நடத்த வேண்டி உள்ளது.

**பா.ஜ.க. வெற்றி பெறாது!**

ஐந்து மாநில சட்டமன்ற தேர்தலில் 3 மாநிலங்களில் பா.ஜ.க. குறிப்பிடத் தகுந்த வெற்றி பெற்றிருக்கிறது. நாடாளுமன்ற தேர்தலிலும் இந்த போக்கு தானே தொடரும் என்று ஐயம் பலருக்கு உள்ளது. 2003ஆம் ஆண்டு பா.ஜ.க. தலைமையிலான என்டிஏ அணி 4 மாநில சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றனர். எனவே, அப்போதைய பாஜக பிரதமர், நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்தினார். ஆனால், பா.ஜ.க. தோற்று மன்மோகன் சிங் பிரதமரானார். 2018ல் நடைபெற்ற 3 மாநில சட்டமன்ற தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அதற்கு அடுத்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் தோற்றது. மோடி பிரதமரானார். 2023ம் ஆண்டு 3 மாநில சட்டமன்ற தேர்தல்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது. இது தான் போக்கு என்றால், 2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெறாது. இதை சாத்தியமாக்க அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும். அரசியல் சாசனத்தை, இந்தியாவை பாதுகாக்க போராட வேண்டும். இந்தியா என்கிற அதன் தன்மையை பாதுகாக்கிற போராட்டமாக நாடாளுமன்ற தேர்தல் நடைபெற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். யெச்சூரி உரையை மத்தியக்குழு உறுப்பினர் உ. வாசுகி மொழியாக்கம் செய்தார்.





தி.மு.க மருத்துவ அணி சார்பில் – பெருமழை வெள்ளம் பாதித்த, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில், 37 சிறப்பு மருத்துவ முகாம்கள் நேற்று முன்தினம் (16–12–2023) நடைபெற்றது. சென்னை – இலாயிட்ஸ் காலனியில் உள்ள, அர்பேசர் சுமித் – மண்டலம் 9 அலுவலக வளாகத்தில், தூய்மை பணியாளர்களுக்காக நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமை கழக இளைஞரணிச் செயலாளர் – இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மருத்துவ அணித் தலைவர் கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி, மருத்துவ அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., பகுதி கழகச் செயலாளர்கள் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மதன்மோகன், மா.பா.அன்புதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பிரகாஷ், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் ஜீவகன் அய்யநாதன், மாவட்ட தலைவர் ரியாஸ், தொகுதி அமைப்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.



மழை வெள்ளப் பாதிப்புக்குப்பின் பொதுமக்களுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் களத்தில் நின்று வழங்கி வரும் நிலையில், திருவல்லிக்கேணி பகுதி, மாட்டாங்குப்பத்தில், தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் சீனிவாசன் ஏற்பாட்டில் சிறப்பு மருத்துவ முகாமை நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், வி.பி.பொன்னரசு மற்றும் பலர் உள்ளனர்.




சென்னை தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழி தனசேகரன் தலைமையில் விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 5000 குடும்பங்களுக்கான நிவாரண பொருட்களை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்கினார். இதில் அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை நிலைக்குழு தலைவர் க.தனசேகரன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், கலைஞர் நகர் தெற்கு வடக்கு பகுதி கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு.இராசா மற்றும் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராசன் பா.வாசுகிபாண்டியன் திருமதி ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., ஆர்.சசிகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.6 ஆயிரம் நிவாரணம் வழங்கல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

# புயல் நிவாரணம் குறித்த சந்தேகங்கள் தீர்க்க கட்டுப்பாட்டு அறை!

## உணவுப்பொருள் வழங்கல் - நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஏற்பாடு!

சென்னை, டிச.18- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று வேளச்சேரியில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000/- நிவாரணத் தொகை வழங்கி தொடங்கி வைத்தார்.

மிக்ஜாம் புயல் நிவாரணம் குறித்த சந்தேகங்களை பொது மக்களுக்கு தீர்க்க கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணத் தொகையாக ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) வழங்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்க ஏதுவாக டோக்கன்கள் வீடுவீடாக சென்று விநியோகிக்கப் பட்டு வருகிறது. டோக்கன்கள் கிடைக்கப்பெற்றவர்கள், அதில் குறிப்பிட்ட தேதியிலும், நேரத்திலும், குறிப்பிட்டுள்ள நியாய விலைக் கடைக்கு சென்று ரூ.6000/- பெற்றுக்கொள்ளலாம். டோக்கன்கள் கிடைக்கப்பெறாத மற்றும் குடும்ப அட்டை இல்லாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நியாய விலைக் கடைகளில், அதற்கென உரிய படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்..

முதலமைச்சர் அவர்கள் நேற்று (17.12.2023) சென்னை, வேளச்சேரி, அஷ்டலட்சுமி நகரில் உள்ள நியாய விலைக்கடையில் காலை 10.00 மணிக்கு மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000/- நிவாரணத் தொகை வழங்கி தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மற்ற நியாய விலைக் கடைகளில் காலை 10.15 மணிக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

அடுத்து வரும் நாட்களில், நியாய விலைக்கடைகளில் முற்பகல் 9.00 மணி முதல் 1.00 மணி வரையும், பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரையும் நிவாரணத் தொகை மற்றும் படிவம் வழங்கப்படும்., மேற்படி நிவாரணத் தெகை பொதுமக்களுக்கு எவ்வித புகாருக்கும் இடமின்றி வழங்கிடவும், புகார் எழும் சூழலில், அதனை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு நல்கிடவும் ஏதுவாக சென்னை, சேப்பாக்கம் எழிலகத்தில் அமைந்துள்ள உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அலுவலகத்தில் 17.12.2023 நேற்று, காலை 8.00 மணி முதல் இரவு 8.0 மணி வரை கட்டுப்பாட்டு அறை செயல்படும்.

பொதுமக்கள் நிவாரணத் தொகை குறித்த தங்களது சந்தேகங்களை 044--2859 2828 மற்றும் 1100 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்கள் வாயிலாகவும் தொடர்பு கொண்டு கேட்டறியலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நீதிபதிகளுக்கு தீர்ப்புரை எழுதத் தகுதியில்லையா?

# உயர்நீதிமன்றங்கள் - உச்சநீதிமன்றத்தில் பன்முகத் தன்மை காக்கப்பட வேண்டும்!

## நாடாளுமன்ற மாநிலங்களவையில் - கழக உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தல்!

*புதுடெல்லி, டிச.18-* நாடாளுமன்ற மாநிலங்களவையில், ‘தேவையற்ற சட்டங்களை ரத்து செய்யும் மசோதா’ மீதான விவாதத்தில், பேசிய கழக உறுப்பினர் பி.வில்சன் “உயர்நீதிமன்றங்களிலும், உச்சநீதிமன்றத்திலும் பன்முகத் தன்மை காக்கப்பட வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் பி.வில்சன் எம்.பி., ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு:

நான் எழுப்புக்கூடிய மற்றுமொரு முக்கிய பிரச்சினையும் இருக்கிறது. அது நீதித்துறையில் சமூக பன்முகத்தன்மை இல்லை என்பதேயாகும்.. உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகளின் எண்ணிக்கை அல்லது உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகளின் பிரதிநிதித்துவத்தைப் பார்க்கும் போது, உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் சமூக பன்முகத் தன்மை இல்லை.

சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தினால் நாடாளுமன்றத்தில் வழங்கப் பட்ட தகவல்களைப் பாருங்கள். 2018 முதல் 2029 வரை எடுத்துக் கொண்டால், சுமார் 80% பேர் உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் என்றே அறியப்படுகிறது. ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்கள்.. அந்த சமூகத்தின் பெயரை குறிப்பிட விரும்பவில்லை.. மீதமுள்ள 20% பேர் மட்டுமே, பிற்படுத்தப் பட்ட மற்றும் எஸ்.சி/எஸ்.டி சமூகத்தைச் சார்ந்தவர்கள்..

மேலும், உச்ச நீதிமன்றத்தில் இந்த நிலை இன்னும் மோசமாகும்.

அவைத்தலைவர்: நீங்கள் உங்களுடைய கருத்தினைக் கூறிவிட்டீர்கள்.. மிக அழுத்தமாக கூறியிருக்கிறீர்கள்..

பி.வில்சன்: என் கருத்தை மட்டுமே இங்கு பதிவு செய்கிறேன். மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களுக்கு நன்றி.. இத்தகைய பிரதிநிதித்துவத்தை அவர்கள் ஏன் கருத்தில் கொள்வதில்லை ஒரு பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சார்ந்தவர் நீதிபதி ஆவதில் என்ன தவறு.. அவரால் தீர்ப்பு களை வழங்க முடியாது என்று நினைக்கிறீர்களா நான் இரண்டு விஷயங் களைப் பார்க்கிறேன். அதாவது கொலீஜியமானது மற்ற வகுப்புகளைச் சேர்ந்த தகுதியான



ஒருவரை அடையாளம் காணத் தவறிவிட்டது அல்லது மற்ற வகுப்புகளைச் சேர்ந்த திறமையான நபர்களை அடையாளம் காண்பதில் கொலீஜியம் ஆர்வம் காட்டவில்லை.

எனவே, இத்தகைய விஷயங்கள் பரிசீலிக்கப் பட வேண்டிய உரிய நேரம் இதுவாகும்.. மசோதாவின் மீது உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி!

அவைத்தலைவர்: விவாதத்தின் மீது பதிலுரை அளிக்க அமைச்சர் அவர்களை அழைப்பதற்கு முன்பு, சட்டம் இயற்றுவது என்பது மிகவும் தீவிரமான விஷயம் என்று நான் கூறுவேன்.. சட்டம் இயற்றும் பொறுப்பு நம்மிடம் மட்டுமே உள்ளது. இதில் இரண்டு வேறுபட்ட பிரிவுகள் உள்ளன. அரசியலமைப்பின் உயர்சிறப்பியான பாராளுமன்றமானது, அரசியலமைப்பில் சில மாற்றங்களைச் செய்தால், அதுவே இறுதியானது. நிர்வாகத் துறையாக இருந்தாலும் சரி, நீதித்துறையாக இருந்தாலும் சரி எந்த முகமையும் அதில் தலைமிட முடியாது. ஆனால், சட்டம் என்று வரும்போது, நீதித்துறை யானது, நீதித் துறை மறுஆய்வு மூலம் தலையிடும் வழிமுறை உள்ளது.

ஏனெனில் ஒவ்வொரு சட்டமும் அரசியலமைப்பு விதிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். எனவே, விஷயங்கள் மிகவும் தெளிவாக உள்ளது. அரசியலமைப்பு விதியைப் பொறுத்தவரை, நாடாளுமன்றத்தில் இருந்து வெளிப்படுத்தப்படும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் தொடர்பாக எந்தவொரு தலையிடும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. நாடாளுமன்றம் மட்டுமே மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும் ஒரே அமைப்பாகும் ..அப்படியே இந்த தளமானது கட்டமைக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

# நாமக்கல்லில் 1,616 பயனாளிகளுக்கு ரூ. 11.80 கோடியில் இலவச வீட்டு மனை பட்டாக்கள்!

## வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்

*நாமக்கல், டிச 18 -* நாமக்கல் மாவட்டம், பொம்மைகுட்டைமேட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற சிறப்பு பட்டா வழங்கும் முகாம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராம லிங்கம், சேந்தமங்கலம் கு. பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு ரூ.11.80 கோடி மதிப்பீட்டில் 1,616 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களையும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 100 ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களையும், கலைப்பண்பாட்டு துறை சார்பில் மாவட்ட அளவிலான கலைப்போட்டிகளில் வெற்றி பெற்ற 15 மாணவ, மாணவிகளுக்கு ரூ.70,000/ மதிப்பில் பரிசுத் தொகைகளையும் வழங்கி பேசினார். அப்போது அவர் பேசுகையில்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ் நாடு அரசின் சார்பில் ஓராண்டு முழுவதும் தொடர்ந்து கொண்டாடி வருகிறோம். மக்களுக்கு பயன்படும் வகையில் அடிப்படை வசதிகள், சுகாதாரம், தொழில்சார்ந்த திட்டங்கள், கல்வி, மருத்துவம், சாலை, உணவு, வீடு என அனைத்தையும் சிந்தித்து செயல்படுத்தி மக்கள் நல பணியாற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். நம் முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இதுவரை இல்லாத அளவிற்கு அனைத்து தரப்பு மக்களும் உதவிபெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களை புத்தாக்க சிந்தனை உடையவர்களாக உருவாக்கும் வகையில் பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார். அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களிடையே தொழில் முனைவோர் மனப்பான்மையை வளர்ப்பதற்காக “பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக பள்ளி மாணவர்களின் புதிய தொழில் கண்டுபிடிப்புக்களை ஊக்குவிப்பது, தொழில் முனைவோர் கலாச்சாரத்தை வளர்ப்பது, தொழில் முனைதல் மற்றும் தலைமைத்துவ பண்புகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது என்றார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பேசும்போது, கழக தலைவர் தலைமையிலான ஆட்சியில் தேர்தலின் போது அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமை தொகை தகுதியுடைய அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என முதல்வர் உத்தரவு பிறப்பித்துள்ளானர். தகுதியுடைய அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமை தொகை வழங்க மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார். பட்டா அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே தகுதி உடையவர்களுக்கு பட்டா கிடைக்க வில்லை என்றால் அதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உடனே பட்டா பெற்றுக் கொள்ள வேண்டும் பட்டா இல்லா மாவட்டமாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது என்றார்.

தொடர்ந்து நாமக்கல் நகராட்சி, நாமகிரித் தாயார் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த மாவட்ட அளவிலான மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் அலங்கார பொருட்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் கண்காட்சியையும், நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புதிய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஆவின் பாலகத்தையும் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, நகர்மன்ற துணைத் தலைவர் செ.பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மகளிர் திட்ட இயக்குநர் மா.பிரியா, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.சாந்தா அருள்மொழி, முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் பிரபாகரன், ஒன்றிய செயலாளர்கள் வி.கே.பழனிவேல், அ.அசோக்குமார்,நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவக்குமார் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ரங்கம் பாளையம் Dr.RANM கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பில் நடைபெற்ற மூன்றாவது மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாமினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் எ.ஜி.வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி துணை மேயர் வி.செல்வராஜ், கோவை மண்டல இயக்குனர் (வேலை வாய்ப்பு) ஜோதிமணி, உதவி இயக்குநர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் ராதிகா, கல்லூரி தாளாளர் கே.கே.பாலுசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.




மக்களுடன் முதல்வர் திட்டம் துவங்கி வைக்கவும்,
செம்மொழிப் பூங்கா அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்க
கோவைக்கு வருகை தரும்

# முத்தமிழறிஞரின்
# மனசாட்சியே



மாண்புமிகு
# தமிழ்நாடு முதல்வர்
அவர்களே



வருக! வருக!! என வரவேற்கும்...

மாண்புமிகு அமைச்சர்
**சு.முத்துசாமி** அவர்கள்,
வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை

**நா.கார்த்திக்,** Ex.MLA.,
கோவை மாநகர் மாவட்டச் செயலாளர்

**தளபதி முருகேசன்,**
கோவை தெற்கு மாவட்டச் செயலாளர்

**தொ.அ.ரவி,**
கோவை வடக்கு மாவட்டச் செயலாளர்

# ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக

# 4 மாவட்டங்களில் கழகத்தினர் மேற்கொண்ட நிவாரணப் பணிகள்


திரு.வி.க.நகர்


திருத்தணி


தியாகராய நகர்


பல்லாவரம்


மதுரவாயல்



மதுராந்தகம்


விருகம்பாக்கம்


வில்லிவாக்கம்


பூந்தமல்லி


திருப்போரூர்

# 4 மாவட்டங்களில் கழகத்தினர் மேற்கொண்ட நிவாரணப் பணிகள்



வேளச்சேரி



திருவொற்றியூர்



பெரம்பூர்



பொன்னேரி



ஆவடி



இராயபுரம்



திருப்பெரும்புதூர்




மாநில அவசரகால செயல்பாட்டு மையம்



மயிலாப்பூர்



திருவள்ளூர்



காணை மத்திய ஒன்றிய மாவட்ட பிரதிநிதி மறைந்த அன்னியூர் அமிர்தலிங்கம் திருவுருவப் படத்திற்கு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி நிதியுதவி வழங்கி அன்னாரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., ம.ஜெயசந்திரன், இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் ஏ.சிவா, ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.இராஜா, ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய கவுன்சிலர் சரசு தேவராசு, வழக்கறிஞர் பொன். கோபு, சுற்றுச்சூழல் அணி அகிலன், ஆதிராவிட நலக் குழு அணி தர்மலிங்கம், சித்தாமூர் சிவராமன், கவுன்சிலர் கருணா, ஒன்றிய நிர்வாகிகள் பழனி, நடராஜன் துணைத் தலைவர் வீரராகவன் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி இளைஞர் அணி 2வது மாநில மாநாடு டிசம்பர் 24 அன்று நடைபெறுவது குறித்தும், பி.எல்.ஏ 2 மற்றும் பி.எல்.சி. பொறுப்பாளர்கள் பணிகள் குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார். மாநில நிர்வாகிகள் இரா.தாமரைச்செல்வன்,தர்மச்செல்வன், செந்தில்குமார், மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி,மாவட்ட நிர்வாகிகள் ரேணுகா தேவி,உமாசங்கர்,ஆறுமுகம்,பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.ஜி. சேகர்,சோலை மணி, சரஸ்வதி துரைசாமி,தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜ்,மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள்,நகர நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தலைமை! அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சிறப்புரை!

# கழக இளைஞர் அணி 2 வது மாநாட்டில் 23,000 இளைஞர் அணியினர் பங்கேற்பு!

## நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், டிச. 18 - நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற் குழு கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவல கமான கலைஞர் அறிவால யம் இனமானப் பேராசிரி யர் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணி மாறன் வரவேற்றார். வனத்துறை அமைச்சர் மருத்துவர்மா.மதிவேந்தன் சிறப்புரையாற்றினார். சட் டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் பொன்னு சாமி ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

இதில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலா ளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி பேசும் போது, சேலம் மாவட்டத் தில் வரும் டிசம்பர் மாதம் 24ஆம் தேதி கழக இளை ஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர் கள் தலைமையில் நடை பெற உள்ள கழக இளை ஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் பேருரையாற்றுகிறார். இம் மாநாட்டில் நாமக்கல் கிழக்கு மாவட்டம் சார் பில் நாமக்கல் சட்டமன்ற தொகுதியில் 8000, சேந்த மங்கலம் சட்டமன்ற தொகுதியில் 6500, இராசி புரம் சட்டமன்ற தொகுதி யில் 8500 என மொத்தம் 23,000 கழக இளைஞர் அணியினர் வெண் சீருடை யில் திரளாக மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும். கடந்த சில நாட்களுக்கு முன் சென் னையில் மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட பகுதிக ளில் ஒன்றான திருவொற்றி யூர் பகுதியில் நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிக ளில் ஈடுபட்ட கழக நிர்வாகி கள் அனைவருக்கும் நெஞ் சார்ந்த நன்றியை தெரி வித்துக் கொள்கிறேன என் றார்.

கூட்டத்தில் மாநில நிர் வாகிகள் பார்.இளங்கோ வன், நாமக்கல் ப.ராணி, சி.ஆனந்தகுமார், ராஜேஷ் கண்ணா, மாவட்ட துணை செயலாளர்கள் நலங் கிள்ளி, கே.செல்வம், வி.பி. ராணி, தலைமை செயற் குழு உறுப்பினர் மரு.இரா. மாயவன் பொதுக்குழு உறுப்பினர்கள், சசிதரன், விமலா சிவக்குமார், சரவ ணன், கண்ணன், பூவராக வன், குணசேகரன்,

நகர கழகச் செயலாளர் கள் என்.ஆர்.சங்கர், ராணா ஆனந்த், எஸ்.பூபதி, அ.சிவக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.பி.ஜெகநாதன் ஆர். எம்.துரைசாமி, அ.அசோக் குமார், வி.கே.பழனிவேல், பி.பாலசுப்ரமணியம், பெ.நவலடி. எம்.பி.கெள தம், ஆர்.ஜெயப்பிரகாஷ், எஸ்.செந்தில்முருகன்,

பேரூர் கழகச் செயலா ளர்கள் பொன்.நல்லதம்பி, ஆர்.எஸ்.எஸ்.ராஜேஷ், பி. ஜெயக்குமார், என்.செல்வ ராஜ், என்.தனபால், சி. செல்லவேல், முருகேசன், சுப்பிரமணியன், கே.அன் பழகன், பழனியாண்டி, சார்பு அணி நிர்வாகிகள் சி.விஸ்வநாத், சத்தியசீலன், பொன்.சித்தார்த், தீபக், முரளி மற்றும் கழக நிர்வா கிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறு தியாக மாவட்ட பொதுக் குழு உறுப்பினர் கு.காளி யப்பன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் சேலம் மாவட்டத்தில் வரும் டிசம் பர் மாதம் 24ஆம் தேதி கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலை மையில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் கழகத் தலைவ ரும், தமிழ்நாடு முதலமைச் சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் பேருரையாற்றுகி றார். இம்மாநாட்டில் நாமக்கல் கிழக்கு மாவட் டம் சார்பில் நாமக்கல் சட் டமன்ற தொகுதியில் 8000, சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதியில் 6500, இராசி புரம் சட்டமன்ற தொகுதி யில் 8500 என மொத்தம் 23,000 கழக இளைஞர் அணியினர் வெண் சீருடை யில் திரளாக மாநாட்டில் கலந்து கொள்வது,

மிக்ஜாம் புயல் காரண மாக தொடர்ந்து பெய்து வந்த கனமழையால் பாதிக் கப்பட்ட சென்னை, திரு வள்ளூர், காஞ்சிபுரம் மற் றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்ட மக்களுக்கு தேவையான மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கை களை தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படை யில் மேற்கொண்டது. கழ கத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சமான மு.க.ஸ்டாலின் அவர்க ளின் உத்தரவின்படி நாமக் கல் கிழக்கு மாவட்ட செய லாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் மற் றும் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆகியோர் இணைந்து திரு வொற்றியூர் பகுதியில் நிவாரணம் மற்றும் சீர மைப்பு பணிகளை மேற் கொண்டனர். நாமக்கல் மாவட்ட நிர்வாகம் சார் பில் ரூ. 2 கோடியே 2 லட் சம் மதிப்பில் 31 வாகனங்க ளில் பால் பவுடர், பிஸ்கட், ரொட்டி,அரிசி, சமையல் எண்ணெய் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. இந்த நிவாரணப் பொருட்கள் திருவொற்றி யூர் மற்றும் மணலி பகுதி யில் உள்ள சுமார் 15 ஆயி ரம் குடும்பங்களுக்கு வழங் கப்பட்டன. நிவாரணப் பொருட்களை அனுப்ப உதவிய அனைத்து அமைப் புகளுக்கும், இக்கூட்டத் தின் மூலம் நன்றி தெரிவித் துக் கொள்ளப்படுகிறது. மிக்ஜாம் புயலால் பாதிக் கப்பட்ட திருவொற்றியூர் பகுதியில் 1 வார காலமாக களப்பணியில் ஈடுபட்ட வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராம லிங்கம், நாமக்கல் கிழக்கு நகர செயலாளர் பூபதி, புதுச்சத்திரம் வடக்கு ஒன் றிய செயலாளர் கௌதம், புதுச்சத்திரம் தெற்கு ஒன் றிய பொறுப்பாளர் ஜெய பிரகாஷ், எருமப்பட்டி பேரூர் செயலாளர் பழனி யாண்டி, பிள்ளா நல்லூர் பேரூர் செயலாளர் சுப்பிர மணி, வெண்ணந்துர் பேரூர் செயலாளர் இரா ஜேஷ், பட்டணம் பேரூர் செயலாளர் பொன்.நல்ல தம்பி, மாவட்ட இளை ஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வ நாத், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பா.கிருபா கரன், மாவட்ட இளை ஞர் அணி துணை அமைப் பாளர்கள் மா.கார்த்திக், பிரபாகரன், மாவட்ட மீன வர் அணி துணை அமைப் பாளர் பார்த்தசாரதி, நாமக்கல் ஒன்றிய பொரு ளாளர் கணேசன், கிழக்கு நகர இளைஞரணி அமைப் பாளர் சிலம்பரசன், மேற்கு நகர இளைஞரணி அமைப் பாளர் வினோத் குமார், நாமக்கல் தெற்கு நகர இளைஞரணி அமைப்பா ளர் எஸ்.சதீஷ், நாமக்கல் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் சுந் தர்ராஜ், வெண்ணந்துார் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்மணிகண் டன், நாமகிரிப்பேட்டை பேரூர் இளைஞரணி அமைப்பாளர் எம்.சுரேஷ், சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி தகவல்தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப் பாளர் தாமரைக்கண்ணன், நாமக்கல் கிழக்கு நகர இளைஞரணி நிர்வாகிகள் டி.கமல்ராஜ், சஞ்சீவ்ராஜ், கார்த்திக், நாமக்கல் தெற்கு நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஸ், பவித்ரன், இராசிபுரம் நகர இளைஞரணி பாண்டி, சேந்தமங்கலம் பேருர்இ ளைஞர் அணி துணை அமைப்பாளர் கவின், வார்டு இளைஞர் அணி கிஷோர் மற்றும் சிபி,நாமக் கல் தெற்கு நகர தகவல் தொழில்நுட்ப அணி சமூக வலைதளம் அர்வின் குமார், 32 வார்டு இளைஞ ரணி பிரவீன் குமார், 33 வார்டு இளைஞரணி முபா ரக், இளைஞர் அணி பிர வின், பாலாஜி, ராமகிருஷ் ணன், நாமக்கல் தெற்கு நகர இளைஞர் அணி நிர் வாகிகள் மற்றும் பிரகாசம், நாமக்கல் ஒன்றியம், பால சுப்பரமணி, கழக நிர்வா கி கள்அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்வது,

கடந்த 21.11.2023 அன்று நாமக்கல் மாவட் டம், பொம்மைகுட்டை மேட்டில் நடைபெற்ற இளைஞர் அணி செயல் வீர்ரகள் கூட்டத்தில் மறைந்த மாவட்ட இளை ஞர் அணி அமைப்பாளர் இரா.அருணகிரி அவர்க ளின் நினைவு கொடி கம் பம், நிகழ்ச்சி நடைபெற்ற நுழைவாயிலுக்குமறைந்த இளைஞர் அணி நிர்வா கிகள் கே.உதயகுமார், ஏ.சுந்தரம் ஆகியோரது பெயர் மற்றும் மேடைக்கு மறைந்த இளைஞர் அணி நிர்வாகிகள் எஸ்.கண் ணன், எஸ்.மோதில்ராஜ், ஆர்.மணிவேல் ஆகியோ ரது நினைவாக அவர்களின் பெயர் சூட்டப்பட்டு அவர்களுக்கு மரியாதை செலுத்தி, அவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி யினை வழங்கி, விழா பேருரை ஆற்றிய கழக இளைஞர் அணி செயலாள ரும், இளைஞர் நலன் மற் றும் விளையாட்டு மேம் பாட்டுத்துறை அமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டத் தின் மூலம் நன்றி தெரிவித் துக் கொள்ளவது, இச்செ யல் வீரர் கூட்டம் சிறப் பாக நடைபெற அனைத்து வகையிலும் துணை நின்ற ஒன்றிய, நகர, பேரூர் செய லாளர்கள் மற்றும் இளை ஞர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்வது உள் ளிட்ட பல்வேறு தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் மங்கை நல்லூரில் நடைபெற்ற கலைஞரின் வரும் முன் காப்போம் மருத்துவ முகாமை மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் குத்தாலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் மங்கை எம்.சங்கர், மாவட்ட ஊராட்சித் தலைவர் உமாமகேஸ்வரி சங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டம்

# ரூ.52.99 இலட்சத்தில் முடிவுற்றப் பணிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை டிச.18 புதுக்கோட்டை மாவட் டம், திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதி களில் ரூ.52.99 இலட்சம் மதிப்பிலான பல்வேறு முடிவுற்றப் பணிகளை,

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகு பதி (15.12.2023) அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற் காக எண்ணற்றத் திட்டங் களை செயல்டுத்தி வருகி றார்கள். அந்தவகையில் பொதுமக்களின் வசதிக் காக சாலைவசதி, மின்வ சதி, குடிநீர்வசதி உள்ளிட் டவைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதன்படி திருமயம் மற்றும் பொன்ன மராவதி ஊராட்சி ஒன்றி யப் பகுதிகளில் ரூ.52.99 இலட்சம் மதிப்பிலான பல் வேறு முடிவுற்றப் பணிகள் திறந்து வைக்கப்பட்டது.

திருமயம் ஊராட்சி ஒன் றியம், மேலப்பனையூர் ஊராட்சி, பொன்னனூரில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.7.17 இலட்சம் மதிப்பீட் டிலும், கண்ணனூர் ஊராட்சியில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.6.75 இலட் சம் மதிப்பீட்டிலும், மேலத் துருவாசபுரம் அம்பலக்கா ரர் வீதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச் சித் திட்டத்தின்கீழ், ரூ.4.86 லட்சம் மதிப்பீட்டில் 80 மீட்டர் நீளமுடைய சிமெண்ட் சாலை பணியி னையும், கீழத்துவாச புலத் தில் ஆதிதிராவிடர் காலனி யில் ரூ.2.43 லட்சம் மதிப்பீட்டில் 40 மீட்டர் நீளமுடைய சிமெண்ட் சாலை பணியினையும், வி.லெட்சுமிபுரம் ஊராட் சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நமக்கு நாமே திட்ட த்தின் கீழ் கற்பக விநாயகா அறக் கட்டளையின் நிதியுதவி யுடன் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப் பட்டுள்ள பேவர் பிளாக் சாலைப் பணியினையும், வி.லெட்சுமிபுரம் ஊராட் சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறு தித் திட்டத்தின்கீழ், ரூ.10.90 லட்சம் மதிப்பீட் டில் அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும் திறந்து வைத்து, வி.லெட்சுமிபுரம் ஊராட்சி, சிவன் கோவில் வளாகத்தில் 250 மரக்கன்று கள் நடும் பணியினையும் துவக்கி வைத்தார். அத னைத்தொடர்ந்து, பொன் னமராவதி ஊராட்சி ஒன் றியம், நல்லூர் ஊராட்சி, மேமணப்பட்டியில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.9.90 இலட்சம் மதிப்பீட் டிலும், நெறிஞ்சிக்குடி ஊராட்சி, பாலப்பட்டி யில் 6KVA/11KV மின்மாற்றி ரூ.6.48 இலட்சம் மதிப்பீட் டிலும் புதிய மின்மாற்றிகள் திறந்து வைக்கப்பட்டது.

திருமயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளையும் முன்னேறிய பகுதிகளாக மாற்றம் செய்திடும் வகை யில் இப்பகுதிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது. எனவே பொதுமக் கள் அனைவரும் மாண்பு மிகு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் இதுபோன்ற வளர்ச் சித் திட்டப் பணிகளை முழுமையாக பயன்படுத் திக்கொண்டு தங்களது வாழ்வாதாரத்தினை மேம் படுத்திக்கொள்ள வேண் டும் என அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார். இந்நி கழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நா.கவி தப்பிரியா, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு(எ)சிதம் பரம், மின்சார வாரிய செயற்பொறியாளர் எம். ஆனந்தாய், உதவி செயற் பொறியாளர் கா.ராம னா தன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கர், நளினி, மின் பொறியாளர் சாத்தையா, வட்டாட்சி யர் புவியரசன், ஊராட்சித் தலைவர்கள் ராமநாதன் (எ) ராமசாமி (வி.லெட்சுமி புரம்), சண்முகசுந்தரம் (கண்ணனூர்), கணேசன், மேகநாதன், கே.ஆர்.ராம சாமி, பொன்.பாரி, சுப. துரைராஜா, அருண்குமார், ராஜமாணிக்கம், முல்லை ரமேஷ், அண்ணாத்துரை, சிவக்குமார், அய்யாச்சாமி, காசி. பொற்ச்செல்வன், உள்ளாட்சி அமைப்புக ளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர் பலர் கலந்து கொண்டனர்.

### மேயர் பிரியா ராஜன் தலைமை! செ.தமிழ்வேந்தன் முன்னிலை!

# திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் 2வது கட்டமாக 10,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, டிச. 18 - வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு சென்னை கிழக்கு மாவட்டம் தி.மு.க சார்பில் திரு.வி.க நகர் வடக் குபகுதியில் உள்ள 71, 71அ, 72அ, 74, 74அ, ஆகிய வட் டங்களில் 2வது கட்டமாக 5 கிலோஅரிசி,போர்வை, பாய், ரொட்டி, பால், பிஸ் கேட், ஆகிய பொருட்களை 10,000 குடும்பத்தினருக்கு நலத்திட்ட உதவிகளை சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அற நிலையத்துறை மற்றும் பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

இந்நிகழ்வில் மேயர். பிரியா, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., பகுதி செயலா ளர் செ.தமிழ்வேந்தன், புனி தவதி, சரிதாமகேஷ்குமார் பி.உதயசங்கர், பெரம்பூர். ஆர்.மகேஷ், எல்.பாண்டு ரங்கன், மு.சரவணன், பகுதி அமைப்பாளர் சே.மணி மா றன், வட்ட செயலாளர்கள்: எஸ்.புஷ்பராஜ், மா.ருத்ர மூர்த்தி, எம்.இசட். அபோய், ஜி.கிருஷ்ண குமார், எம்.ஏ. டீக்கா, பரிமளா சுரேஷ், தில்லை கதிரவன், புல்லட். கி.ரமேஷ், ஆர்.ராஜன், புவ னவதி, கினார் ஆறுமுகம், வி.ஜெகன், சுவீட்.பாபு, சீனிவாசன், அண்ணாதுரை, மதுரை பிரகாசம், துரை சாமி, விஜயகுமார், க.எழி லன், வ.நாமதேவன், டி. ராஜி, சத்தீஷ், இளஞ்செழி யன், ராஜராஜன், த.வே. ஏகாம்பரம், இ.எஸ்.ரவிச்சந் திரன், எஃப்.செபாஸ்டின், சாக்ரடீஸ், ஜான்ரூவில், பி. ஜெயஸ்தா மஸ், சீஞ்சான், கிரிஜா, ஜி. சரண்ராஜ், மு. முகமதுரஃபி,

71. த.வே.ஏகாம்பரம், பாலாஜி, வி.வினோத், ஜமுனா குணசேகர், சங்கர், துரைபிரகாசம், லிங்கேசன், எஸ்.பாபு, ராமமூர்த்தி, ரவி குமார், 71. சிவகுமார், உஷா, வி.நரேஷ், ஆர். நாராயணன், கார்த்திக், பல் சர் குமார், சஞ்சய்,மில்க் ரகு,சுரேஷ், முரளி, கஜேந்தி ரன், நீலகண்டன்,

71 (அ) ஜெ.மகிரசன், உமேஷ்குமார், பார்த்தி பன், கவிதா, ரபியுல்லா கான் நந்தகுமார், விஸ்வநா தன், வ.சரவணன், நரேஷ். கி.சரவணன், லட்சுமி, சாந்தா வீரமுத்து, சபிதா, பாப்பு, மாரி, கார்த்திக், சரத், பிரேம், சசிகுமார், நிறைமொழி,

72. இன்பசேகர், ஆசை ராஜேந்திரன், சிவகுமார், செல்விராமகிருஷ்ணன், ஜெகதீசன், மகாதேவன், மோகன், பாண்டியன், எஸ். பாண்டியன், கலை சேகர், ஜி.வினோத், சுரேஷ், டேனி யல், பாக்கியநாதன், கர்ணா, ராஜேஷ், ராஜசே கர், சுலோர் மணி, சகயாபா ரதி கிரிஜா, பவானி, யுவ ராணி

72(அ) ந.வேலு, சிவ ஜானி, ஏ.சேகர், ருக்மணி, ரவிக்குமார், சங்கர், பிரபு தாஸ், வில்லியம்ஸ், குமார், யுவராஜ், கிரிஜா, தினேஷ், உஷா, சீமா, வே.கிரிதரன், அரவிந்தன். வேலு, சரண் ராஜ், சந்தோஷ், ஆகாஷ், வெங்கட்ரமானா, சகிலா, சந்தா, ரிட்டா, அங்கபாபு, செல்வகுமார், தியாகு.

74. வெங்கடேசன், சதீஸ், மதிமாறன், செண்ப கவள்ளி, மகேந்திரன், சேகர், சீனிவாசன், அருள், நேசன், போஸ், யோகனந் தம், வினோத், ஞான சேகர், ஜெகதீஸ், விஜய், வினோத், டேனியல், ஏ. ஜான், வெங் கட், ஹார்த், சேட்டு, ஷகிலா, கலை, அன்பு, அமுலு, கிரிஸ் டபர், குப்பன், ராம்மூர்த்தி, ராம்மூர்த்தி

74 (அ)ரவி பிரபு நிவாஸ், வள்ளல், சரளா,தினேஷ்கு மார், பிரபாகரன், விஷ்ணு, சியோன்ராஜ், விஜயகுமார், மோகன்ராஜ், சி.ஆனந்த், ஆர்.மனோஜ்குமார்.

பாக நிலை முகவர்கள் இளைஞர் அணி நிர்வாகி கள் மற்றும் கழக தோழர் கள் கலந்து கொண்டனர்.



சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் கீழ் புதுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட சம்பட்டிவிடுதி 4 ரோடு பகுதியில் உள்ள எ ஸ்.ஆர்.கே. திருமண மஹாலில் புதுக்கோட்டை தொகுதியைச் சார்ந்த 200 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்வை துவங்கி வைத்து தனது சொந்த செலவில் 200 கர்ப்பிணிப் பெண்களுக்கு சேலைகளை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் மு.க ராமகிருஷ்ணன், தவ பாஞ்சாலன், மாவட்ட சேர்மன் ஜெயலட்சுமி தமிழ்செல்வன் உள்ளிட்ட கழகத்தின் கலந்து கொண்டனர்.



மக்களுடன்
முதல்வர்
திட்ட தொடக்க
விழாவிற்கு
வருகை தரும்
மாண்புமிகு
இளந்தலைவர்
அவர்களே வருக. வருக..
ARASU ARTS
கே.என்.நேரு
கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ.
செயலாளர் – சேலம் மத்திய மாவட்டம்
டி.எம்.செல்வகணபதி
செயலாளர் – சேலம் மேற்கு மாவட்டம்
எஸ்.ஆர்.சிவலிங்கம்
செயலாளர் – சேலம் கிழக்கு மாவட்டம்
அன்புடன் வரவேற்கும் : சேலம் மாவட்ட தி.மு.க.

# திராவிட மாடல் அரசு 47

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**










## அமுதூட்டும் ஆலயங்கள்!

‘அன்னமிட்டு உண்’ என்பது தமிழர் பண்பாடு. அதை ஆலயங்களிலும் பின்பற்றியதுதான் திராவிட இயக்கத்தின் மாண்பு. தெய்வங்களை வணங்கி, சுவாமி தரிசனம் செய்த பின் பக்தர்கள், பசியுடன் திரும்பக் கூடாது என்ற உயரிய நோக்கத்தின் வெளிப்பாடுதான் திருக்கோயில்களில் அன்னதானம் எனும் வழக்கம்.

பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வைக்கப்படும் பொய்க் குற்றச்சாட்டு, ‘முந்தைய ஆட்சியின் நல்ல திட்டங்களை, தி.மு.க பின்பற்றாது’ என்பது. அது எவ்வளவு பெரிய அறமற்ற விமர்சனம் என்பதற்கு கோயில்களில் மேற்கொள்ளப்படுகிற ‘அன்னதானத் திட்டமே’ சான்று.

ஆம். 2002-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில், கோயில்களில் ஒரு வேளை அன்னதானம் தொடங்கப்பட்டது. பிறகு, 2012-ஆம் ஆண்டு முதல், நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

**‘திராவிட மாடல் அரசு’ என்பதன் இலக்கே ‘அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அரசாட்சி’ என்பதுதான்.** அதனால்தான், 2021-இல் ஆட்சிக்கு வந்ததும், அந்தத் திட்டத்தை மேலும் சிறப்புற விரிவாக்கம் செய்துள்ளது.

### நீளும் அன்னக் கைகள்

முந்தைய ஆட்சிக் காலத்தில், 754 கோயில்களில் வழங்கப்பட்டு வந்த ஒரு வேளை அன்னதான திட்டத்தை, 2022-2023 சட்டப்பேரவை அறிவிப்பின்படி, மேலும் 10 கோயில்களுக்குச் சேர்த்து, 764 கோயில்களில் பக்தர்களுக்கு உணவிடுகிறது நம் கழக அரசு. தொடர்ந்து, 2023-ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதி அன்று, இந்தத் திட்டம் புதிய கோயில்களில் தொடங்கி வைக்கப்பட்டது. ‘ஒரு வேளை அன்னதானம்’ திட்டத்தின் கீழ், நாள்தோறும் 28 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் சுமார் 82 ஆயிரம் நபர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

**‘திராவிட மாடல் அரசு’ என்பதன் இலக்கே ‘அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அரசாட்சி’ என்பதுதான்.**

அது மட்டுமல்ல. தொடர்ந்து 2023-2024 சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின் போது, இந்தத் திட்டம் மேலும் 7 திருக்கோயில்களில் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அவை செயல்பாட்டுக்கு வரும்போது சுமார் 300 பேர் வரை பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு ஒவ்வோர் ஆண்டும் இந்தத் திட்டத்தின் கீழ், பல கோயில்களைச் சேர்த்துக்கொண்டே செல்கிறது நம் கழக அரசு.

### மூன்று வேளை உணவு!

கிராமப்புறங்களில் உள்ள சிறிய கோயில்களில், ஒரு வேளை அன்னதானம் அளித்து பக்தர்களின் வயிறு குளிர்விக்கப் படுகிறது என்றால், நகரங்களுக்கு அருகில் உள்ள பெரிய, பிரபலமான கோயில்களில் பக்தர்களின் பசிப்பிணி போக்க, மூன்று வேளையும் உணவு பரிமாறப்படுகிறது.

தொடக்கத்தில், ஸ்ரீரங்கம் அரங்க நாதசுவாமி திருக்கோயில் மற்றும் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் மட்டும்





### மூன்று வேளையும் முழுச் சாப்பாடு!

‘கோயில்களில் அன்னதானம்’ என்றவுடன், ‘ஏதோ சம்பிரதாயத்துக்கு ஏதாவது வெரைட்டி ரைஸ் வழங்குவார்கள்’ என்று பலரும் நினைக்கி றார்கள். ஆனால் உண்மையில், மூன்று வேளையும் சாதம், சாம்பார், ரசம், மோர், பொரியல், கூட்டு, அப்பளம் ஆகிய வற்றுடன் முழுச் சாப்பாடு வழங்கப்படுகிறது.

சில கோயில்களில், வடை மற்றும் பாயசமும் வழங்கப்படுகிறது. பக்தர்களுக்கு வழங்கப்படும் பொரியல் மற்றும் கூட்டுவகைகள், நாள்தோறும் மாறிக் கொண்டே இருக்கும்.

‘நாள் முழுவதும் அன்னதானம்’ திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், 2021-இல் நம் ‘திராவிட மாடல் அரசு’ பொறுப்பேற்ற பிறகு, இந்தத் திட்டம் 2021-2022 சட்டப்பேரவை அறிவிப்பின்படி, **திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருத்தணி சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்** ஆகிய மூன்று திருக்கோயில்களில் செயல்படுத்தப்படுகிறது.

இதே திட்டம், 2022-2023 சட்டப்பேரவை அறிவிப்பின்படி, இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயில் மற்றும் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் ஆகியவற்றில் செயல்படுத்தப்படுகிறது.

ஆக, இந்த 8 கோயில்களில் இந்தத் திட்டத்தின் மூலம் 24 ஆயிரத்து 800 நபர்கள் பயனடைகிறார்கள்.

அடுத்து, திருவள்ளூர், பெரியபாளையம் பவானியம்மன் திருக்கோயில், விழுப்புரம் மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் மற்றும் கோவை ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயில் என மேலும் மூன்று கோயில்களுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கான அறிவிப்பு 2023-2024 சட்டப்பேரவைக் கூட்டத்தில் வெளியானது. இந்தக் கோயில்களில் இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வரும் வேளையில் சுமார் 4 ஆயிரத்து 500 பேர் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நிறைவான உணவு, இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இப்படி எல்லோருக்கும் எல்லாம் என்ற லட்சியத்தை மனதில் ஏந்தி செயல்படுகிறது நம் ‘திராவிட மாடல் அரசு’. அதற்கு இந்த அன்னதான திட்டமே சான்று.

**...சாதனை தொடரும்**

## ‘உருவ கேலி’யைக் கடந்தவர் பெரியார்!

‘தந்தியில்லாத தொலைபேசிகள் வருங்காலத்தில் வரும்’ என்று தன் வாழ்நாளில் கணித்தவர் தந்தை பெரியார். இன்றுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியைப் பார்க்க நேர்ந்தால் மிகவும் மகிழ்வார்.

ஆனால், தொழில்நுட்பம் வளரும் அதே நேரத்தில், ‘அதைத் தங்களின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தாமல் என்னை இழிவுபடுத்துவதாக நினைத்துக் கொண்டு தொழில்நுட்பத்தையும் நேரத்தையும் வீணாக்குகிறார்களே’ என்று சிரித்துவிட்டுக் கடந்திருப்பார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ‘ஃபன்றி’ எனும் மராத்தித் திரைப்படம் வெளியானது. அதன் இறுதிக் காட்சியில் பன்றியைப் பிடிக்க ஓடும் தங்களைப் பார்த்து ஏளனம் செய்யும் மக்களை நோக்கி, அந்தப் படத்தின் நாயகச் சிறுவன் கல்லை வீசுவது போன்று காட்டப்பட்டிருக்கும். உண்மையில், அதை ஒடுக்கப்பட்டோரை ஏளனம் செய்யும் அனைவரின் மீதும், எறியப்பட்ட கல்லாகவே அதைப் புரிந்து கொள்ள முடியும்.

தற்போது இணையத்தில் சுற்றி வரும் பெரியார் குறித்த உருவ கேலி ஏ.ஐ. (செயற்கை நுண்ணறிவு) படத்தை உருவாக்கி சமூக ஊடகங்களில் உலவ விட்டதன் மூலம், ‘ஃபன்றி’ படத்தில் எறியப்பட்ட கல்லுக்கு, தாங்களே முன் வந்து தங்கள் தலையைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான் பொருள்.

உருவ கேலி செய்யும் செயற்கை மூளைகள் அதை உணர்வது கடினம்தான்!

## ஃப்ளாஷ்பேக்





### கொடியும் படமும்!

இளைஞர் அணி தொடங்கப்பட்ட போது புரசைவாக்கத்தில் கழகக் கொடியேற்றும் நிகழ்வை இன்றைய கழகத் தலைவர் அவர்களை அழைத்து, என் தந்தை மா.மணி நடத்தினார். 1985-ஆம் ஆண்டு கழகத் தொண்டர் அணி தொடங்கப்பட்டபோது, புரசைவாக்கத்திலிருந்து சென்ற என் தந்தை உள்ளிட்ட தொண்டர் அணி நிர்வாகிகள் முத்தமிழறிஞர் கலைஞருடனும் தலைவர் தளபதி அவர்களுடனும் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. என் தந்தை மறைந்த போது அவரது படத் திறப்பு விழாவுக்கு தளபதி அவர்கள் வருகை தந்தார்.


அருண்குமார்

**-ம.அருண்குமார், 67-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், கொளத்தூர் கிழக்குப் பகுதி, சென்னை கிழக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

**பட்டப்படிப்பு வரை பயணம் இலவசம்!**

**1968-ஆம் ஆண்டில், முதலாமாண்டு மட்டுமிருந்த இலவச கல்வி, கலைஞர் முதல்வரான பின் முழுப் பட்டபடிப்புக்கும் இலவசமாக்கப்பட்டது. போக்குவரத்து வசதியின்றி இடைநிற்றல் கூடாதென்பதற்காக மாணவர்களுக்கு இலவச பயணச் சலுகை வழங்கி, 2010-இல் அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பையும் இலவசமாக்கியது கழக அரசு. நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களிலும் பல புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 332




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131